சுருக்கம்

திட்டங்கள் – மாநிலத் திட்டம் – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – 2017–2018–ஆம் ஆண்டு முதல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி – ஒவ்வொரு தொகுதிக்கும் தலா ரூ.2.00 கோடியிலிருந்து ரூ.2.50 கோடியாக உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது..

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி–1) துறை

அரசாணை(நிலை) எண்.102

ஹேவிளம்பி – ஆவணி 30
திருவள்ளுவர் ஆண்டு–2048
நாள்: **15.09.2017**

படிக்கப்பட்டவை.

1. அரசாணை (நிலை) எண். 80, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி1) துறை, நாள் 28.10.2011.
2. அரசாணை (நிலை) எண். 57, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி1) துறை, நாள் 29.05.2017.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.19681/2017/NEDM-2, நாள் 01.08.2017.

----

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டநிதியின் கீழ், 2011–12–ஆம் ஆண்டு முதல், ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ரூ.1.75 கோடியிலிருந்து ரூ.2.00 கோடியாக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2017–18–ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ் ஒவ்வொரு தொகுதிக்கும் தலா ரூ.2.00 கோடி என மொத்தம் ரூ.470.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான நிர்வாக ஒப்புதல் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளுக்கான ஆணை வெளியிடப்பட்டது.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 19.07.2017 அன்று சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ் 2017–18 ஆம் ஆண்டு முதல் தற்போது வழங்கப்பட்டு வரும் ரூ.2.00 கோடியிலிருந்து ரூ.2 கோடியே 50 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்தார்.

4. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மேற்குறிப்பிட்டுள்ளவாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ள தொகையான ரூ.2.50 கோடியை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட கூறு நிதி ரூ.110.00 இலட்சம் (Tied Component) என ஏற்கனவே உள்ளவாறு அனுமதிக்கலாம் என்றும் வரையறுக்கப்படாத கூறு நிதியாக (Untied Component) ரூ.90.00 இலட்சம் என உள்ளதை ரூ.140.00 இலட்சம் என

. . . 2..

உயர்த்தி வழங்கிடலாம் என்றும் தெரிவித்துள்ளார். எனவே, 2017–18 ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தற்போதைய நிதி ஒதுக்கீடான ஒவ்வொரு தொகுதிக்கும் தலா ரூ.2.00 கோடி என்பதை ரூ.2.50 கோடி என உயர்த்தியும், அதில் வரையறுக்கப்பட்ட கூறநிதியாக (Tied Component) ரூ.1.10 கோடி மற்றும் வரையறுக்கப்படாத கூறுநிதியாக ரூ.1.40 கோடி என நிதி ஒதுக்கீடு அளித்தும், மேற்படி அனுமதிக்கப்படும் நிதி ஒதுக்கீட்டில் சட்டமன்ற உறுப்பினர், தமது தொகுதிக்கு வரையறுக்கப்பட்ட கூறு நிதி மற்றும் வரையறுக்கப்படாத கூறு நிதி ஆகிய இனங்களின் கீழ் ஏற்கனவே அரசாணை(நிலை) எண்.57, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி–1) துறை, நாள்.29.05.2017ல், 2017–18 ஆம் ஆண்டிற்கு வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளில் கண்டுள்ளவாறு பணிகளை தேர்வு செய்து செயல்படுத்திடவும் அனுமதி வழங்கி ஆணையிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனைச் செய்து, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியினை அரசாணை (நிலை) எண்.57, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1) துறை, நாள்.29.05.2017ல், வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி, 2017–18 ஆம் ஆண்டு முதல் ரூ.2.00 கோடியிலிருந்து ரூ.2.50 கோடியாக உயர்த்தி அரசு ஆணையிடுகிறது. மேலும், பெரும்பான்மையான பணிகள், வரையறுக்கப்பட்ட கூறுவகையின் (Tied Component) கீழ் வருவதால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேட்பாட்டுத் திட்டத்தின் கீழ் உயர்த்தப்பட்ட ரூ.50.00 இலட்சத் தொகையில் ரூ.40.00 இலட்சத்தை வரையறுக்கப்பட்ட கூறு நிதிக்கும் (Tied Component) (ரூ.110.00 இலட்சம் + 40.00 இலட்சம் = ரூ.1.50கோடி), எஞ்சிய ரூ.10.00 இலட்சத்தை வரையறுக்கப்படாத கூறு நிதிக்கும் (Untied Component) (ரூ.90.00 இலட்சம் + 10.00 இலட்சம் = ரூ.1.00 கோடி) என ஒதுக்கீடு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்படும்:–

4515-00 - ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு – 789 ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் – மாநிலச் செலவினங்கள் – JB சிறப்புக் கூறுகள் திட்டத்தின்கீழ் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏனைய திட்டங்களை நிறைவேற்றுதல் – 16 பெரும் பணிகள்
(த.தொ.கு 4515-00-789-JB 1606)

4515-00 - ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு –796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – மாநிலச் செலவினங்கள் –JC சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஏனைய திட்டங்களை நிறைவேற்றுதல் – 16 பெரும் பணிகள்
(த.தொ.கு 4515-00-796-JC 1609)

4515-00 - ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு – 800 ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் –JF சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏனைய திட்டங்களை நிறைவேற்றுதல் – 16 பெரும் பணிகள்
(த.தொ.கு 4515-00-800-JF 1602)

7. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்டத் தொகையினைப் பெற்று சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு (சென்னை மாவட்டம் நீங்கலாக) / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கும், விடுவிக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகிறது.

. . .3..

8. இந்த ஆணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண். 47207/Fin(RD)/ 2017, நாள் 14.09.2017-ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்

அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வாயிலாக).
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
செயலாளர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வாயிலாக).
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
இயக்குநர், பேரூராட்சிகள் இயக்குநரகம், சென்னை–108.
ஆணையர், கருவூலக் கணக்கு, சென்னை–15.
உறுப்பினர்/செயலர், மாநிலத் திட்டக் குழு, சென்னை–5.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை–108.
மாநில தலைமை கணக்காயர், சென்னை – 18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (தலைமைச் செயலகம்), சென்னை–9.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
தேசிய தகவல் மையம், சென்னை–9.

நகல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர்/செயலாளர் – II, சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, மற்றும் சிறப்புத்திட்ட செயலாக்கத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
தலைமைச் செயலரின் தனிச் செயலர், சென்னை–9.
நிதி (வரவு–செலவு– I / வரவு–செலவு– II / ஊ.வ) துறை, சென்னை– 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

N. சரவணன்
பிரிவு அலுவலர்.
15.09.17